**செய்தி வெளியீடு எண்: 418** **நாள்: 29.02.2024**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, ரோலர் ஸ்கேட்டிங் வீராங்கனை செல்வி. நௌஷீன் பானு சந்த் அவர்களுக்கு ரூ. 5.25 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவை சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்" கீழ் 86 கோடி ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்" என அறிவித்தார்.

மேலும், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரோலர் ஸ்கேட்டிங் வீராங்கனை செல்வி. நௌஷீன் பானு சந்த் அவர்களுக்கு டென்சிங் ஹிலாரி மவுண்ட் எவரெஸ்ட் சர்வதேச மராத்தான் போட்டியில் பங்குபெற ரூ. 5.25 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,**

"கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை நம்முடைய கோவை மாவட்டத்தில் உள்ள 228 ஊராட்சி மன்றங்களுக்கு வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள 12620 கிராம பஞ்சாயத்துகளுக்கும் ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களை கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் என்ற திட்டத்தை சென்ற வாரம் மதுரையில் தொடங்கி வைத்தோம்

மதுரைக்கு அடுத்து இன்றைக்கு நம்முடைய கோவை மாநகரத்தில் நடைபெறுகின்ற இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கிரிக்கெட், வாலிபால், கால்பந்து, சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் கொண்ட கலைஞர் விளையாட்டு உபகரணங்களை கொண்டு போய் சேர்க்கின்ற ஒரு பெருமையான நிகழ்ச்சியாக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கக் கூடிய சைக்கிளிங் வீராங்கனை தங்கை தனியதாவிற்கு என்னுடைய வாழ்த்துக்கள். யூத் காமன் வெல்த் கேம்ஸ் மற்றும் உலக சாம்பியன்ஷிப் கொலம்பியா 2023ல் பங்கேற்று நம்முடைய தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்திருக்கிறார் நம்முடைய அருமை சகோதரி அவர்கள்.

அதே போன்று கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில் இரண்டு வெண்கல பதக்கம் மற்றும் ஒரு தங்கப் பதக்கம் வென்று நம்முடைய தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர் சகோதரி தனியதாவிற்கு அவர்கள்.

அதே போன்று கோவையை சேர்ந்தவர் தங்கை நித்யா... ஆசிய விளையாட்டுப் போட்டிகள். மற்றும் IAAF World Championship போட்டியில் பங்கேற்று இரண்டு வெண்கல பதக்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றிருக்கிறார். அவருக்கும் நம்முடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தனியதா மற்றும் வித்யா மாதிரி இங்கு அத்தனை பேரும் ஒவ்வொரு விளையாட்டு வீரராக சிறப்பாக பயிற்சி செய்து உங்களுடைய விளையாட்டுகளில் நீங்கள் சாதனை படைக்க வேண்டும் என்பது தான் இந்த திட்டத்தினுடைய ஒரே நோக்கம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டில் அவருடைய பெயரிலேயே இந்த திட்டம் செயல்படுவதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி கூடுதல் பெருமை. இன்றைக்கு இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கின்ற வகையில் விளையாட்டுத் துறை சார்ந்த ஏராளமான முன்னெடுப்புகளை நாங்கள் எடுத்து வருகின்றோம்

சமீபத்தில் கூட கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளை நடத்திக் காட்டினோம். இந்த கோவை மாவட்டத்திலும் நடத்தினோம். கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 39 வெண்கல பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதல் முறையாக பதக்க பட்டியலில் 2வது இடத்தை பிடித்துள்ளது.

அடுத்த முறை நம்முடைய தமிழ்நாடு முதல் இடத்தை பிடிக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது. நம்முடைய விளையாட்டு மேம்பாட்டு துறை எடுத்து வருகின்ற முயற்சிகளை பாராட்டி CII (Confederation of Indian Industries) என்ற அமைப்பு தமிழ்நாட்டிற்கு Best State for Promoting Sports என்ற விருதை வழங்கி கௌரவித்தார்கள்.

அதே போல் 'தி இந்து' பத்திரிகை வெளியிடும் "Sports Star" மிகவும் பிரபலமான பத்திரிகை. எங்களை பாராட்டி இந்தியாவிலேயே விளையாட்டை ஊக்குவிக்கும் ஒரு சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என்று (Best State for Promoting Sports) என்ற விருதை வழங்கினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழைப்பிற்கும், எண்ணத்திற்கும் இங்கு வந்திருக்க கூடிய விளையாட்டு வீரர்களின் திறமைக்கும் கிடைத்திருக்க கூடிய விருது தான் இந்த இரண்டு விருதுகள்.

கடந்த வருடம் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கி, அதன் மூலம் ஏராளமான ஏழை எளிய மாற்றுத் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கும் தொடர்ந்து நாங்கள் உதவிகளை செய்து வருகிறோம். நேற்று மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெற்றோர்கள் ஆசிரியர் சங்க மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார்.

பல்லாயிரக்கணக்கான பேர் அதில் பங்கேற்று இருந்தார்கள். அதில் பேசும் போது அவர் சொன்னார் அவருடைய பள்ளிக்கல்வித்துறைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 44,000 கோடி ஒதுக்கி உள்ளார்கள். ஆனால், விளையாட்டுத் துறைக்கு ரூ. 440 கோடி ஒதுக்கி உள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் பள்ளிக்கல்வித் துறைக்கு தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என கூட்டத்தில் பேசினார்கள். முதலமைச்சர் தான் வழங்கவில்லை என்றால், நண்பர் நீங்களாவது கொடுக்கலாமே. நான் நிதி கேட்கவில்லை. நான் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்று தான். அந்த ஆசிரியர்களிடம் ஒரே ஒரு கோரிக்கை தான். பள்ளிகளில் விளையாட்டு நேரத்தை குறைத்து, அந்த நேரத்தில் கணிதம், அறிவியல் பாடத்தை நடத்துவதை தவிர்த்து விளையாட்டு நேரத்தில் மாணவர்களை விளையாட அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் துறைக்கு நிதி தேவையில்லை. விளையாட்டு வீரர்களிடம் உள்ள திறமையை வைத்து நாங்கள் சாதித்துக் காட்டுவோம்.

இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு முதன் முதலில் நிதி வழங்கியது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான். தனது முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் உடனே எங்களுக்கு கொடுத்தார். இதுவரைக்கும் 300–க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ரூ 6 கோடி அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக நிதி உதவி வழங்கி இருக்கிறோம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பதக்கங்களை வெல்லுகின்ற நம்முடைய வீரர், வீராங்கனைகளுக்கு தொடர்ந்து உயரிய ஊக்கத் தொகையினை வழங்கி வருகின்றோம்.

கடந்த வாரம் சாதனை படைத்த 650 வீரர்களுக்கு ரூ 16 கோடியே 24 லட்சம் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கி இருக்கின்றோம். தொடர்ந்து தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய கோப்பை ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள், ஸ்குவாஷ் உலகப் கோப்பை, வோர்ல்ட் சர்ஃபிங் லீக், சைக்கிளோத்தான், சென்னை செஸ் மாஸ்டர் 2023, தேசிய ஹாக்கி விளையாட்டுப் போட்டி என தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

இந்தியாவில் விளையாட்டுத் துறை அது தமிழ்நாடு தான் என்ற வகையில் தொடர்ந்து புதுப்புது முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். அதில் மிகமிக முக்கியமானது தான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கின்றோம். விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் இருப்பது அல்ல. கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். கிராமங்களிலிருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வர வேண்டும் என்பதற்காக தான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கின்றோம். இந்த விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி கிராமங்கள் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

முத்தமிழறிஞர் கலைஞருடைய பெயரால் எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும், நம்முடைய விளையாட்டுத் துறை சார்பாக முதல்முறையாக கலைஞர் பெயரால் விளையாட்டுத் துறை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அது தான் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்.

கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் என பல முகங்கள் உண்டு. ஆனால் விளையாட்டுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு. ஏன் அவருடைய பெயரை இத்திட்டத்திற்கு வைத்துள்ளீர்கள் என சில பேர் கருதலாம். கலைஞர் அவர்கள் தன்னுடைய சிறு வயதிலேயே களத்தில் இறங்கி எல்லா விளையாட்டையும் விளையாடியவர். அதன் பிறகு தான் அரசியலுக்கு வந்து ஆடுகளத்தில் நுழையாமல் அரசியல் களத்தில் விளையாடி வந்தார்.

ஆனால் கலைஞர் அவர்கள் ஒரு ஆர்வமிக்க விளையாட்டு வீரர், போட்டிகளுடைய ரசிகர். அது கிரிக்கெட் போட்டியாக இருந்தாலும் சரி, தடகளப் போட்டி, ஒலிம்பிக் போட்டி, கால்பந்து போட்டியாக இருந்தாலும் சரி, அனைத்து போட்டிகளையும் நெருக்கடியான நேரத்திலும் அந்த போட்டிகளை தொலைகாட்சியில் பார்த்து ரசிபவர் தான் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆனால் அதையெல்லாம் விட அவருடைய பெயரை இத்திட்டத்திற்கு சூட்டியதற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. ஒரு விளையாட்டு வீரருக்கு இருக்கு வேண்டிய அத்தனை குணங்களும் திறமைகளும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அது தான் அவருடைய சிறப்பு.

ஒரு விளையாட்டு வீரருக்கு என்னென்ன திறமைகள் வேண்டும். நல்ல எனர்ஜி வேணும். நல்ல கூர்மையான அறிவுத்திறன் வேண்டும். தோல்வியிலும் துவண்டு விடாத

மன திடம் வேண்டும். இதைவிட முக்கியம் நல்ல டீம் ஒர்க் வேணும். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த திறமைகள் அனைத்தும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரிடம் இயல்பிலேயே இருந்தது. கலைஞருடைய எனர்ஜிக்கு நிகரான எனர்ஜியை நாம் நினைத்துக்கூட பார்க்க முடியாது. வேறொருவரோடும் ஒப்பிட்டு பார்க்க முடியாது. இவ்வளவு நவீன போக்குவரத்து வசதிகள், சாலை வசதிகள், தொலைதொடர்பு வசதிகள் எல்லாம் இப்போது இருக்கிறது. இந்த காலத்திலேயே ஒவ்வொரு ஊருக்கும் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கு சிரமமாக உள்ளது. ஆனால், எந்த விதமான வசதிகளும் இல்லாமல், அந்த காலத்திலேயே தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாக சுற்றுப்பயணம் சென்று கட்சியை வளர்த்தவர் தான் டாக்டர் கலைஞர் அவர்கள். ஒரே நேரத்தில் அரசியலிலும், சினிமாவிலும், இலக்கியத்திலும் கொடிகட்டி பறந்து இருக்கிறார் என்றால் அவர் எவ்வளவு உழைத்திருக்க வேண்டும் என்று நினைத்துப் பார்க்க வேண்டும். கலைஞர் அவர்களுக்கு உள்ள எனர்ஜி ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணம்.

அடுத்து கலைஞர் அவர்களுக்கு இருக்கக் கூடிய கூர்மையான அறிவுத்திறன். தான் என்ன செய்ய போகிறோம். அதற்கு பதிலாக எதிரில் இருப்பவர் என்ன சொல்ல போகிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்லலாம். அதற்கு முன்கூட்டியே யோசித்து செயல்பட கூடியவர் தான் டாக்டர் கலைஞர் அவர்கள். ஒரு விளையாட்டு வீரருக்கும் அந்த திறமை தேவை. நாம் இப்படி விளையாடினால் நம்முடைய எதிர் அணியினர் எப்படி விளையாடுவார் என்று கணிக்க வேண்டும்.

அடுத்து கலைஞருடைய மன திடம். தோல்வியாக இருந்தாலும் சரி. வெற்றியாக இருந்தாலும் சரி, இரண்டையுமே சமமாக பார்க்கக் கூடியவர் தான் டாக்டர் கலைஞர் அவர்கள். தோல்வி அடைந்து விட்டோம் என்று துவண்டு விடக்கூடாது. வெற்றி பெற்று விட்டோம் என்று அகங்காரத்தோடு இருக்கக் கூடாது. அப்படி தான் கலைஞருடைய வாழ்க்கையில் கடைபிடித்து இருக்கிறார்.

தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருந்தால் வெற்றி நிச்சயமாக நம்மை தேடி வரும் என்ற மனதிடத்துடன் கடைசி வரை கலைஞர் அவர்கள் உழைத்துக் கொண்டிருந்தார்கள். அதே போன்று மன உறுதி இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கலைஞருடைய டீம் வொர்க். கலைஞர் மாதிரி டீம் வொர்க் செய்த இன்னொரு நபரை இந்த உலகத்தில் பார்க்க முடியாது. அந்த டீமை கலைஞர் அவர்கள் நேர்த்தியாக

வழிநடத்தி கொண்டிருந்தார்கள். கலைஞர் அவர்களுக்கு பின் அந்த டீமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிநடத்தி கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் ரீதியாக எவ்வளவு ஒடுக்கு முறைகள் இருந்தாலும், எவ்வளவு சிக்கல்கள் வந்தாலும் அதையெல்லாம் அந்த டீமை வைத்து தான் கலைஞர் அவர்கள் வெற்றியாக கையாண்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கையாண்டு கொண்டிருக்கிறார்கள்.

அதே போன்று தான் விளையாட்டிலும் நல்ல டீமை நீங்கள் உருவாக்கி கொள்ள வேண்டும். நல்ல டீம் அமைந்தாலே நீங்கள் பாதி வெற்றி பெற்று விட்டோம் என்று அர்த்தம். இப்படி ஒரு திறமையான விளையாட்டு வீரருக்கு இருக்கக்கூடிய அனைத்து திறமைகளையும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதனால் தான் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத அரசியல் வீரராக விளையாட்டு வீரராக கலைஞர் அவர்கள் இந்தியாவில் உயர்ந்து நின்று கொண்டிருந்தார்.

அத்தகைய கலைஞருடைய பெயரால் வழங்கப்படுகின்ற இந்த விளையாட்டு உபகரணங்களை பெறக்கூடிய இளைஞர்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்வது எல்லாம் கலைஞர் அவர்களுக்கு இருந்த குணங்களையும், திறமைகளையும் நீங்களும் வளர்த்துக்கொள்ள வேண்டும். வெற்றி என்பது சுலபமாக கிடைக்காது. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

இந்த நேரத்தில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் நேற்று இரவு மாணவர்களுடைய விடுதிக்கு சென்று ஆய்வு செய்தது இங்கே குறிப்பிட்டு பேசினார்கள். அதை உடனடியாக சரி செய்த சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கும், வந்திருக்கக் கூடிய சகோதரர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது நம்முடைய பெருமை கிடையாது. நம்முடைய கடமை. அந்த மாணவர்களுக்கு அரசு செய்யக்கூடிய கடமை. மக்களுடைய வரிப்பணத்தில் தான் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது.

அந்த மாணவர்களுக்கு செய்ய வேண்டிய அத்தனையும், நம்முடைய பொறுப்பு. இங்கு வந்திருக்க கூடிய மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அனைவரும் இதை தொடர்ந்து செய்து அந்த மாணவர்கள் படிக்கக்கூடிய, தங்கி இருக்கின்ற விடுதிகளில்

அனைத்து வசதிகளையும் அவர்களுக்கு என்னென்ன கொடுக்க வேண்டுமோ அதை செய்து தர வேண்டியது நம்முடைய கடமை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு விளையாட்டுத் துறை மட்டுமல்ல. நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள துறைகளில் வெல்ல வேண்டுமென்றால், இன்று இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும்.

நீங்கள் அத்தனை பேரும் இந்த திட்டத்தின் மூலம் பயன்படுத்த விளையாட்டு உபகரணங்களை பெறக்கூடிய அத்தனை பேரும் இந்த அரசினுடைய "Brand Ambassadors" நம்முடைய முதலமைச்சருடைய முகம் நீங்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். கலைஞருடைய விளையாட்டு உபகரணங்களை பெற்ற அத்தனை ஊராட்சிகளையும், அத்தனை ஊராட்சியுடைய முகங்களாக உங்களுடைய மாணவர்கள் இளைஞர்களை வாழ்த்துகிறேன்" என்று பேசினார்.

இதன் தொடர்ச்சியாக மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கோயம்பத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. கல்பனா ஆனந்தகுமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. சண்முகசுந்தரம், கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியர் திரு. கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப. ரோலர் ஸ்கேட்டிங் வீராங்கனை செல்வி. நௌஷீன் பானு சந்த், ஆசிய தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ், ஆசிய சைக்கிளிங் வீராங்கனை ஜெ. பி. தனியதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in